**செய்தி வெளியீடு எண்: 597** **நாள்:16.09.2019**

## செய்தி வெளியீடு

தந்தை பெரியார் அவர்களின் 141ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சென்னை, அண்ணா சாலையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(17.9.2019) காலை 10.30 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் தமிழக அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், தந்தை பெரியார் அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 17ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தந்தை பெரியார் அவர்கள், வெங்கடப்ப நாயக்கர் – சின்னத்தாயம்மாள் இணையருக்கு 17.09.1879 அன்று இரண்டாவது மகனாகப் பிறந்தார். பகுத்தறிவுப் பகலவன் எனப் போற்றப்படும் ஈ.வெ. இராமசாமி அவர்களின் வரலாறு தமிழக அரசியல் வரலாற்றுடன் கலந்ததாகும்.

தந்தை பெரியார் அவர்கள், ஈரோடு மாவட்ட வணிகர் சங்கம், விவசாயிகள் சங்கம், தேவஸ்தான சபை, சங்கீத சபை போன்ற 29 பொது அமைப்புகளில் தலைவராகவும், உறுப்பினராகவும் பதவி வகித்தார். 1920ஆம் ஆண்டு காந்தியடிகள் மீது பற்றுகொண்டு காங்கிரஸில் சேர்ந்தார். 1924ஆம் ஆண்டு கேரளா வைக்கத்தில் தீண்டாமைக்கு எதிராகப் போராடி ‘‘வைக்கம் வீரர்’’ ஆனார்.

1925ஆம் ஆண்டு காங்கிரஸை விட்டு வெளியேறி ‘குடியரசு’ வார இதழைத் தொடங்கினார். இவ்விதழில், சாதி ஒழிப்பு, கலப்புமணம், கைம்பெண் மறுமணம், புராண எதிர்ப்பு குறித்து கட்டுரைகள் எழுதினார். 13.11.1938ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில், மறைமலை அடிகளாரின் மகள் நீலாம்பிகை அம்மையார் தலைமையில் டாக்டர். தர்மாம்பாள், இராமாமிர்தம் அம்மையார் ஆகியோர் ஈ.வெ. இராமசாமி அவர்களுக்கு “பெரியார்” என பட்டம் வழங்கினார்கள். 1944 ஆகஸ்ட் 27ஆம் தேதி நீதிக்கட்சியினை திராவிடர் கழகமாக மாற்றினார். தந்தை பெரியார் அவர்கள் 24.12.1973 அன்று இயற்கை எய்தினார். தனது இறுதி மூச்சு வரை சுயமரியாதைக்குரிய கொள்கைகளுக்காகவே வாழ்ந்தார்.

கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்தில் தீண்டாமையை எதிர்த்து போராடிய இடத்தில் தந்தை பெரியார் நினைவாக தமிழ்நாடு அரசு, தந்தை பெரியாருக்கு நினைவிடம் அமைத்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் அவர் வாழ்ந்த வீடு தமிழ்நாடு அரசால் தந்தை பெரியார்–பேரறிஞர் அண்ணா இல்லமாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கேரள மாநிலம் வைக்கத்தில் ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகத்தை 27.06.2014 அன்று திறந்து வைத்தார்கள்.

தமிழக அரசின் சார்பில், தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, அண்ணா சாலையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(17.9.2019) காலை 10.30 மணியளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**